**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

**வத்திராயிருப்பு**

சிசி. எண். 108/2024

அ.சா.7 – முருகன், த/பெ. முனியாண்டி

தேதி – 25.11.2025

எதிரி ஆஜர் இல்லை. 317 குவிமுச மனுசெய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திரு கார்த்திக் குமார் ஆஜர்.

**<u>சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை : –</u>**

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். நான் சொந்தமாக தோட்டம் வைத்துள்ளேன் என்றால் வைத்துள்ளேன். வழக்கின் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் தான். எதிரியின் பெயர் மங்களசாமி ஆகும். இவ்வழக்கின் புகார்தாரரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

காவலர்கள் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவம் நடைபெற்ற இரண்டு மணி நேரத்திற்குள் என்னை விசாரணை செய்தார்கள். போலீசார் என்னை சம்பவம் நடைபெற்ற அன்றைய தினம் 10 மணி போல என்னை விசாரணை செய்தார்களா என்றால் முந்தைய நாளே விசாரணை செய்தார்கள். காவலர்கள் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இருக்கிறதா என்றால் வருடங்கள் ஆகிவிட்டதால் ஞாபகம் இல்லை.

காவலர்கள் என்னை விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவலர்கள் என்னை எங்கே வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவ இடத்திற்கு அருகே வைத்து விசாரணை செய்தார்கள். வழக்கு சொத்து திருடு போனது குறித்த விபரம் எனக்கு போலீசார் சொல்லித்தான் தெரியும் என்றால் சரியல்ல வழக்கு சொத்தை பறி கொடுத்தவர்கள் சொல்லி எனக்கு தெரியும். நகை திருடு போனது பற்றி இந்த வழக்கின் எதிரியோ அல்லது காவலர்களும் என்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் என்னுடைய காவலர்கள் முன்னிலையிலான விசாரணைக்கும், நீதிமன்ற முதல் விசாரணைக்கும் முரண்பட்டு சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் புகார்தாரர் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : – இல்லை .**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு